# உறுப்பினராகச் சேர தகுதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. 30 வயதுக்கு மேலேயும் 60 க்கு கீழேயும் இருக்க வேண்டும். 30 வயதுக்கு கீழ் உள்ளவர்கள் எமது கட்சியில் / சங்கத்தில் / இயக்கத்தில் சேர முடியாது.
2. தனிமனித ஒழுக்கம் (good and exemplary character) இருக்க வேண்டும்.
3. கட்சியில் / சங்கத்தில் / இயக்கத்தில் சேருபவர்கள் ஜாதி மத வேறுபாடுகள் பொது வாழ்க்கையிலும், தனி வாழ்க்கையிலும் கடைபிடிக்கக் கூடாது.
4. சங்கத்திற்கு / கட்சிக்கு / இயக்கத்திற்கு அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் சந்தா தொகை மற்றும் நன்கொடைகளை உறுப்பினராக சேருபவர்கள் செலுத்த கடமைப் பட்டவர்கள்.
5. ஒவ்வொரு உறுப்பினரும் சங்க / இயக்கம் / கட்சி நிர்ணயித்த யூனிபார்ம் (சீருடை) அணிய வேண்டும். கூட்டங்களுக்கு வரும்போது. சிவப்பு சட்டை மற்றும் காக்கி பேண்ட் அணிய வேண்டும்.
6. வெள்ளை சட்டை மற்றும் வெள்ளை பேண்ட் நமது கட்சியின் / சங்கத்தின் / இயக்கத்தின் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் மட்டுமே அணிய முடியும், மற்றவர்கள் அணிய முடியாது. தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் ஆகிய இரண்டு பதவியிலும் ஒரே நபர் தான் இருப்பார், அவர் இறப்பிற்கு பின்னரே மாற்றுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் சங்கத்தின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு. இறப்பிற்கு முன்னர் தலைவர் யார் பெயரை தனக்கு பிறகு நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதே இறுதியானது. இதனை யாரும் எதிர்க்க முடியாது, கோர்ட்டுக்கு செல்லமுடியாது.
7. எழுதப்படிக்க தெரிந்தாலே போதும் சாதாரண உறுப்பினர்களுக்கு. சங்கத்தின் / கட்சியின் / இயக்கத்தின் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் கணினி மற்றும் ஸ்மார்ட் போன் உபயோக அறிவு கண்டிப்பாக இருக்க வேண்டும்.
8. அபரிதமான சொத்துக்கள் வைத்திருப்பவர்களும், பெரும் பணக்காரர்களும் எமது கட்சியில் / சங்கத்தில் / இயக்கத்தில் சேர முடியாது.
9. அனைத்து பதவிகளும் ரிசர்வேசன்படி அனைத்து சமூகங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும். ஒரே சமூகம் அனைத்து பதவிகளையும் அபகரிக்க முடியாது. பெண்களுக்கு 50%, ஆண்களுக்கு 50% பதவிகள் வழங்கப்படும்.
10. கட்சி/சங்க/இயக்க அமைப்பின் கிளை அவரவர் வாழும் பகுதியிலேயே அந்தந்த சமூகங்கள் அமைத்துக்கொள்ள வேண்டும்.
11. கட்சியின்/சங்கத்தின்/இயக்கத்தின் கட்டுப்பாடுகளை மீறுபவர்கள் கட்சி /சங்க /இயக்கத்திற்கு விரோதமான செயல்களில் ஈடுபடுபவர்கள், கட்சிக்கு அவப்பெயரை உண்டாக்கும் செயல்களில் ஈடுபடுவோர்கள் எந்தவித விசாரணையும் இன்றி கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள். இதில் தலைவரின் முடிவே இறுதியானது.

12. கட்சியில்/சங்கத்தில்/இயக்கத்தில் சேருபவர்கள் மீது கிரிமினல் வழக்குகள் இருக்கக் கூடாது. கட்சி / சங்கம் / இயக்கம் சில நபர்களிடம் காவல்துறையில் இருந்து இந்த நபர் மீது எந்த வழக்கு இல்லை என்று ஒரு சான்று வாங்கி வரச் சொல்லவும் உரிமை உள்ளது.
13. கட்சியில் / சங்கத்தில் / இயக்கத்தில் சேருபவர்களுக்கு கடவுள் நம்பிக்கை இருக்காலம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். ஆனால் மூட நம்பிக்கைகள் இருக்கக்கூடாது.
14. மக்களுக்கு செய்த சேவையின் அடிப்படையில் பதவிகள் வழங்கப்படும்.
15. தனிமனித விஷயங்களில் குடும்ப விஷயங்களில் தலையிடுதல் கூடாது. கொள்கைகளை மட்டுமே விமர்சிக்க வேண்டும் தனிமனிதர்களை விமர்சனம் செய்யக்கூடாது.
16. மற்றவர்களை அவருக்கு தெரியாமல், அவரது அனுமதியில்லாமல் செல்போனில் படம் எடுக்கக்கூடாது.
17. எந்த நபரையும் எமது கட்சியில் / சங்கத்தில் / இயக்கத்தில் சேர்க்க மறுப்பதை எதிர்த்து அந்த நபர் எந்த நீதிமன்றத்திற்கும் செல்ல முடியாது.

## <u>உறுதிமொழி</u>

நான் ______________________________________________________

மேற்சொன்ன நிபந்தனைகளை முழு மனதுடன் ஏற்றுக்கொள்கிறேன். அவற்றுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் என்று உறுதிகூறுகிறேன். மேற்சொன்ன நிபந்தனைகள் ஏதாவது ஒன்றை மீறினாலும் என்னை இந்த சங்கத்திலிருந்து / இயக்கத்திலிருந்து / கட்சியிலிருந்து எந்தவித விசாரணையும் இன்றி நீக்கலாம். அதை எதிர்த்து நான் எந்த நீதிமன்றத்திற்கு செல்ல மாட்டேன் என்றும் உறுதிகூறுகிறேன்.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,